நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்பதால், அவையின் இதர அலுவல்களை, இந்தப் பிரச்சினையை விவாதிப்பதற்காக ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விரிவான இந்த விளக்கத்திற்குப்பின், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால், இசைவு மறுக்கப்படுகிறது.

3. சிறப்பு கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டம், வள்ளவிளை கிராமத்தில் மீனவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது குறித்து.

முற்பகல் 11.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் வள்ளவிளை என்ற மீனவர் கிராமத்தில் 17—9—1993 அன்று சிங்காரம் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற ஒரு பிரச்சினை குறித்து பேரவை விதி 56-ன் கீழ் பேரவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர் மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு). அது நம்முடைய சிங்காரம் அல்ல ; வேறு ஒரு சிங்காரம். நம்முடைய சிங்காரத்திற்கு எந்தக் காலத்திலும் எந்தப் பிரச்சினையும் வராது பேரவை விதிகளின்படி ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர் மானத்திற்கு மேல் எடுத்துக் கொள்ள முடியாது என்று இருந் தாலும் பிரச்சினையின் தன்மை கருதி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் வற்புறுத்துகின்ற காரணத்தால் அதை, ‘ஸ்பெஷல் மென்ஷன்’ ஆக அரசாங்கத்திடமிருந்து விளக்கம் கோருகிற வகை யில் அதை எழுப்பலாம் என்று அனுமதிக்கிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17—9—1993 அன்று இரவு 8.00 மணிக்கு கன்னியா குமரி மாவட்டத்திலுள்ள என்னுடைய தொகுதியிலே வள்ளவிளை என்ற மீனவர் கிராமத்திலே ஈளை சிங்காரம் என்ற மீனவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதற்கு முன்னாலே நடைபெற்ற சம்பவத்தின் காரணமாக அங்கே ஏற்பட்டிருக்கிற பதட்ட நிலை காரணமாக பாதுகாப்பிற்காக 6 காவலர்கள் அங்கே போடப் பட்டிருக்கிறார்கள். அந்த 6 காவலர்களிலே ஒருவர் திவீதரன் அலைஸ் நடேசன் என்பவர். அவர் சுட்டதினால் இந்த சிங்காரம் இறந்துபோய் விட்டார். அதுகுறித்து ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1993 அக்டோபர் 28] [திரு. மா. சுந்தரதாஸ்]

அந்தப் பகுதியிலே ஏ. வி. எம். சானல் என்று ஒரு சானல் இருக்கிறது. நெய்யாறு ரிவர். குழித்துறை ரிவர் இவற்றிற்கு இடையே அது இருக்கிறது. அந்தச் சானல் 200 ஆண்டுகளுக்கு முன்னால் வெட்டப்பட்டது. அந்தப் பகுதியிலே இருக்கிற, மக்கள் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் தண்ணீர் எடுக்க வெட்டப் பட்ட சானல், கடந்த 10 ஆண்டு முன்னால் அங்கே '' தென்னை நார் '' ஊறப்போட்டு வருகிறார்கள். அதனால் தண்ணீர் பொல்யூட் ஆகி, அந்தத் தண்ணீர் குடிப்பதற்கு ஆகாது என்று பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டினாலேயே ஆணை வந்த தற்குப் பிறகு அங்கே இருக்கிற மக்கள் ஏ.வி.எம். சானலில் கோக்கனட் நார் ஊறப்போடக்கூடாது என்று தடுத்தார்கள். ஏறத்தாழ கடந்த 3, 4 மாதங்களாக இந்தப் பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக பல்வேறு '' பீஸ் கமிட் டீஸ் '' போடப்பட்டன. அதற்குப் பின்னாலும் இந்தப் பிரச் சினை நடந்துகொண்டிருந்த காரணத்தால் அங்கே பாதுகாப்பிற் காக காவலர்கள் போடப்பட்டிருந்தார்கள். 17—9—1993 அன்று பெண்கள் இரவு குளிக்க வந்தபோது அந்தப் பகுதியிலே இருந்து யாரோ லைட் அடித்து, அந்த மீனவர் பகுதியிலிருந்து லைட் அடித்ததாகச் சொல்லப்படுகிறது. அதனால், ஒரு வாய்ச் சண்டை நடந்திருக்கிறது. உடனே, எந்தக் காரணமும் இல்லா மல் இந்த திவீதரன் அலைஸ் நடேசன் என்ற காவலர் சுட் டிருக்கிறார். இந்தக் காவலர் அரையர் சமுதாயத்தைச் சேர்ந் தவர். அரையர் சமுதாயத்திற்கும் மீனவர் சமுதாயத்திற்கும் தான் பிரச்சினை நடந்துகொண்டிருக்கிறது. அரையர் சமுதா யத்தைச் சேர்ந்த இந்தக் காவலரை அங்கே போட்டதால்தான் இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. அவரைப் போடவில்லை என்றால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது. அங்கே இருக்கிற எஸ்.பி.-யும் கலெக்டரும் இதைக் கண்காணிக்காத காரணத்தால் அதே கிராமத்தைச் சேர்ந்த அரையர் சமுதாயத்தைச் சேர்ந்த காவலர் அங்கே இருந்தார். அவர்தான் சுட்டுக்கொன்றிருக் கிறார்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஏற்கெனவே, இந்தக் காவலரை அங்கிருந்து மாற்ற வேண்டு மென்று அந்தப் பகுதி மக்கள் சொல்லியிருக்கிறார்கள். நானும் பலமுறை சொல்லியிருக்கிறேன். மேலும், அரையர் சமுதா யத்து மக்களுக்கு மாற்றிடம் கொடுங்கள் என்று சொன்னோம். இதற்கு முன்னால் அந்த ஆற்றினுடைய பக்கத்திலேதான் தென்னை நாரை ஊறப் போட்டார்கள். கடந்த 10 ஆண்டு களாக ஊறப்போடுகிறார்கள் அங்கே. அதை மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று நானும் பல தடவை கலெக்டரிடமும் எஸ்.பி. யிடமும் சொன்னேன். அவர்கள் இதை சரியான முறையில் கண் காணிக்காத காரணத்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது.

பொதுவாக எஸ்.பி. எப்போது சொன்னாலும் நான் ''சுடுவேன் சுடுவேன்'' என்றுதான் சொல்வாராம். ''பீஸ் கமிட்டி' போகும் போது இப்படிச் சொல்லியிருக்கிறார். அவர் பஞ்சாபைச் சேர்ந்தவர். இதற்கு முன்னால் மூன்று தடவை சுட்டிருக்கிறார்கள். வாய் எடுத்தாலே சுடுவதுதான் அவர் வாயில் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அம்மமுத்துபிள்ளை தொகுதியில் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை சுட்டிருக்கிறார்கள். அதற்கு முன்னால் என்னுடைய தொகுதி குளச்சலிலே இதே எஸ்.பி. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குச் சொன்னதுதான் உங்களுக்கும். வேறு, வேறு சம்பவத்திற்குப் போகும்போது—இப்படிப்பட்ட சம்பவங்களை நீங்கள் சொல்லலாம்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லலாம். நீங்கள் ஒரு சம்பவத்தைக் கொடுத்துவிட்டு, 2, 3 சம்பவங்களைக் குறிப்பிடும்போது அதற்குப் பதில் இல்லாமல் போவது சரியல்ல. இந்த மாதிரி நேரத்தில் அது வேண்டாம். இந்தப் பிரச்சினையை மட்டும் சொல்லுங்கள்.

முற்பகல் 11-55

திரு. மா. சுந்தரதாஸ் : இந்தச் சம்பவத்தில் மீனவர் இறந்துபோனார். அதற்குப் பின்னால் எஸ்.பி.-யோ கலெக்டரோ அந்த இடத்தை வந்து பார்க்கவில்லை. அந்த இடத்திலே எந்தவிதமான புரொவோகேஷனும் நடக்கவில்லை; சுடுவதற்கு முன்னால் எந்தவிதமான எச்சரிக்கையும் செய்யவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். போலீசார் இருந்த பகுதியிலேதான் ஒரு ''ஷெட்'' எரிந்திருக்கிறதே தவிர, வேறு எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் மத்தியிலே நம்முடைய அரசின்மீது ஒரு கெட்ட எண்ணத்தை உருவாக்கவே அந்த அதிகாரிகள் இப்படிச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இறந்ததற்குப் பின்னால் அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து 50,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. நானும், அந்தப் பகுதி பாராளுமன்ற உறுப்பினரும் நம்முடைய தலைமைச் செயலாளரைக் கலந்து பேசினோம். உடனே, நம்முடைய சீனியர் ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. இராமதாஸ் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின்பேரில் அங்கே வந்தார்கள் வந்ததற்குப் பிறகும் கூட அவர்களை இந்த எஸ்.பி. யும் கலெக்டரும் சம்பவம் நடந்த இடத்திற்குக் கூட்டிக்கொண்டு வரவில்லை. அவர்கள் ஒரு பக்கத்திலே உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். ஆனால், அங்கே மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த [illegible]ங்கள்தான் வந்து பல குறைகளைச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் என்ன ரிப்போர்ட் தந்தார்கள் என்பது தெரியாது..

அந்தப் பகுதியில் இப்போது என்ன நடக்கிறது என்று சொன்னால் எஸ்.பி.யும் கலெக்டரும் சேர்ந்து 12 கேஸ்களை அந்த மீனவர்களுடைய பெயரில் போட்டிருக்கிறார்கள். குறிப்பாக, முன்னாள் பஞ்சாயத்து பிரெசிடென்ட் மற்றும் அந்த ஊரில் படித்து வேலைபார்க்கும் ஒரு ஹையர் செகண்டரி ஸ்கூல் ஹெட் மாஸ்டர் திரு. வர்கீஸ் என்பவர் மீதெல்லாம் 12 கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் யாரும் அங்கே போகவில்லை. அவர்களை ஒதுக்கிவைத்திருக்கிற காரணத்தால் அவர்களுடைய எண்ணங்களை எங்களிடம் சொல்கிறார்கள். ஆனால், இப்போது அந்த மக்களுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால்—50,000 ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுக்கப்பட்டதற்காக நான் பொதுமக்கள் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், அவர்களுக்கு வேண்டியது என்னவென்றால்- அவர்கள் மீது 12 கிரிமினல் கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. அதுவும் பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் பெரியவர்கள் மீதெல்லாம் போடப்பட்டிருக்கிறது. அதை வித்ட்ரா செய்யவேண்டும். அதுபோல் அந்த இந்து அரையர் சமூகத்திற்கு '' ஆல்டர்னேட்டிவ் அரேஞ்மென்ட் ''-ஆக பக்கத்திலே கோக்கனட் ஷெட் போடுவதற்கு இடங்கள் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். ஒரு ஜுடிசியல் என்கொயரி வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். இது எதனால் வந்தது என்ற உண்மை தெரியவேண்டும். தவறான தகவல்களை அந்த எஸ்.பி.யும், கலெக்டரும் கொடுக்கிறார்கள். அதுதான் அந்த மக்களுடைய பீதி. நிச்சயமாக உண்மை அறிந்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்லது செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த எஸ்.பி. அங்கே இருக்கும் காலம் வரையில் அந்த இடத்தில் சட்டம், ஒழுங்கு இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. எனவே, அதை உங்களிடத்திலே விட்டு விடுகிறேன். எனவே, தயவுசெய்து அந்த அதிகாரிகள் மேல் அதாவது கலெக்டர், எஸ்.பி. மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மூன்று கோரிக்கைகள்ளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங்கோடு காவல் நிலையை சரகத்திற்கு உட்பட்ட வள்ளவிளையைச் சேர்ந்த இந்து அரையர்களுக்கும் வள்ளவிளை மற்றும் மார்த்தாண்டத்துறையைச் சேர்ந்த கிறிஸ்தவ மீனவர்களுக்கும் இடையே ஏ.வி.எம். வாய்க்காலில் தென்னை மட்டைகளை ஊற வைப்பதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக கருத்து வேறுபாடு இருந்து வந்தது.

15—6—1993 அன்று பத்மநாபபுரம் கோட்டாட்சியர் இந்த இரு பிரிவினர்களின் பிரதிநிதிகளை அழைத்து அமைதிக்கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில் இந்து அரையர்கள் தொழிலை நடத்த மாற்று இடம் ஒதுக்குவது என்றும், புதிய இடம் தேர்ந்தெடுக்கும் வரை பழைய நிலையிலேயே இரு பிரிவினரும் இருக்க வேண்டும் என்றும் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

10—9—1993 அன்று வள்ளவிளையைச் சேர்ந்த பெஞ்சமின் மற்றும் 5 மீனவர்கள் அரையர் வகுப்பைச் சேர்ந்த வேலப்பன் என்பவருக்குச் சொந்தமான தென்னை மட்டைகளை நாசமாக்கியுள்ளனர். இதுசம்பந்தமாக கொல்லங்கோடு காவல் நிலைய குற்ற எண். 246/93-ன்கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. 12—9—1993 அன்று ஜசமன் மற்றும் 15 மீனவர்கள் அரையர் வகுப்பைச் சேர்ந்த நாகேந்திரன் என்பவருக்குச் சொந்தமான தென்னை மட்டைகளை நாசம் செய்தனர். இது தொடர்பாகவும் கொல்லங்கோடு காவல் நிலைய குற்ற எண். 249/93-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. மேலும், அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருப்பதற்காக அப்பகுதியில் காவலர்கள் காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 17–9–93 அன்று முன்விரோதம் காரணமாக வள்ளவிளையைச் சேர்ந்த கிறிஸ்தவ மீனவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் இந்து அரையர்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்று சில அரையர்களின் வீடுகளுக்கும், கொட்டகைகளுக்கும் தீ வைத்தனர். அன்று பாதுகாப்புப் பணியில் இருந்த 6 காவலர்களும் 7 அரையர்களும் இந்தத் தாக்குதலில் காயம் அடைந்தனர். நிலைமை கட்டுக்கு அடங்காமல் போவதைத் தடுக்கவும், மேலும், சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் வகையிலும் காவலர்கள் வானத்தை நோக்கிச் சுட்டனர். அந்த இடத்திலிருந்து கலைந்து சென்ற சில மீனவர்கள் சர்ச் மணியின் ஒலி எழுப்பி அக்கம், பக்கம் உள்ள எல்லா மீனவர்களையும் ஒன்று திரட்டிக்கொண்டு அரையர் வசிக்கும் பகுதிகளில் மீண்டும் வந்து தாக்க முயற்சி செய்தனர். இந்த நிலையில் சட்டம் ஒழுங்கைக் காப்பதற்காக வள்ளவிளையில் பாதுகாப்புக்காக இருந்த காவலர்கள் சுட்டதில் மார்த்தாண்டத்துறையைச் சேர்ந்த சிங்காரம் என்பவர் குண்டடிபட்டு பின்பு மருத்துவமனையில் காலமானார். இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் வேறு யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இது சம்பந்தமாக கொல்லங்கோடு காவல் நிலைய குற்ற எண். 251/93-ன்கீழ் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பத்மநாபபுரம் கோட்டாட்சியர் பிரேத பரிசோதனை நடத்தினார். சிங்காரத்தின் பிரேதம் பரிசோதனைக்குப் பின்னர் அவரது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டபின்பு 19—9—1993 அன்று அடக்கம் செய்யப்பட்டது மீண்டும் பிரச்சினை எழக்கூடாது என்பதற்காக அந்த 250 இந்து அரையர் குடும்பங்களும் பாதுகாப்பான இடத்ந்ற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர். இந்தச்

துப்பாக்கிச் சூடு தொடர்பாக விசாரணை நடத்த பத்மநாபபுரம் கோட்டாட்சியர் பணிக்கப்பட்டுள்ளார். அவரது விசாரணை அறிக்கை கிடைத்த பின்பு தகுந்த நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12—00

மேலும், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு. சி. என். ராமதாஸ் அவர்களை அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டு, அறிக்கை அனுப்பும்படி ஆணையிட்டிருந்தேன். அவர் பரிந்துரைகளுடன் தன்னுடைய அறிக்கையை அனுப்பியுள்ளார். மீனவர்களுக்கும், அரையர்களுக்கும் இடையே தேங்காய் மட்டைகள் ஊற வைப்பதில் எழுந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் இதற்குரிய முடிவுகளை அரசு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த அசம்பாவிதத்தால் மரணம் அடைந்த சிங்காரம் என்ற மீனவர் குடும்பம் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காக அவருடைய குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாயை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகையாக வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, திரு சி. என். ராமதாஸ் அவர்கள் கொடுத்த அறிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண அரசு எல்லா நடவடிக்கையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அமைகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இப்பிரச்சினை இத்துடன் முடிக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு.

பரமக்குடி-எமனேஸ்வரம் பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியிருக்கும் கைத்தறித் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் வாங்க வேண்டிய அவசியம் குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

TRUTH ALONE TRIUMPHS